# மன்னாரில் அதிரடி; அதிகாரி உட்பட 5 பொலிஸ் பலி


விலை ரூபா 5. 00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆடி 06 இதழ் 132
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 22 - 7 - 1995


## 'லான்ட்ரோவர்' சேதம்!

(யாழ்ப்பாணம்)
சிறீலங்கா இராணுவத்தின் பூரண ஆக்கிரமிப்பிலுள்ள மன்னார்தீவில் வைத்து விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் அதிகாரி உட்பட 5 பொலிசார் பலியானார்கள்.

மன்னார் தீவிலுள்ள தலை மன்னார் பொலிஸ் நிலையத்தில் இருந்து தலைமன்னார் கிராமத்துக்குச் சென்றுகொண்டிருந்த பொலிஸ் அணி மீது தலைமன்னார் வீதியில் வைத்து விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் மாலை 6 05 மணியளவில் இந்த அதிரடித் தாக்கு

(6ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு மோதலில் இராணுவ சிப்பாய் பலி

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பில் படையினருக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடந்த 19-ம் திகதி ஏற்பட்ட மோதல் சம்பவம் ஒன்றில் இராணுவ சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

இம்மோதலில் எதிர்பாராத வகையில் 2-ம் லெப். பாசம் (கிருஷ்ணபிள்ளை விநாயகமூர்த்தி, மட்டக்களப்பு), 2-ம் லெப். சுதா (மயிலப்போடி இலிங்கநாதன்), வீரவேங்கை மொழிவாணன் (நடராசா சிவஞானம்) ஆகிய விடுதலைப் புலிப் போராளிகள் வீரச்சாவடைந்தனர். -க-ரி

## திருமலையில் வெற்றிகர தாக்குதல்

# பள்ளிக்குடியிருப்பு படைமுகாம் விடுதலைப்புலிகளால் அழிப்பு

## 4 ராணுவம் பலி; ஆயுதங்கள் மீட்பு

(திருமலை)
திருகோணமலை–மூதூர் பள்ளிக்குடியிருப்பு இராணுவ முகாம் மீது நேற்று விடுதலைப்புலிகள் நடாத்திய வெற்றிகர அதிரடித் தாக்குதலில் இராணுவ முகாம் முற்றாக அழிக்கப்பட்டது. 4 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் ஏனையோர் இழப்புகளுடன் தப்பியோடினர். பல ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

நேற்று அதிகாலை 12-23 மணியளவில் மூதூர் பள்ளிக் குடியிருப்பு முகாம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்சு மார் 30 நிமிடங்கள் வரையில் தொடர்ச்சியாக இடம்பெற்றது.

இத்தாக்குதலில் பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப் பட்டதுடன் காயமடைந்த படையினருடன் ஏனையோர் தப்பியோடிவிட்டார்கள்.

இந்த வெற்றிகர தாக்குதலில் கப். வதனன் அல்லது

(5ம் பக்கம் பார்க்க)

## இருநாள் தாக்குதல்களில் புலிகள் பெருமளவு ஆயுதங்களை கைப்பற்றினர்

(யாழ்ப்பாணம்)
தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த இரு தினங்களில் நடத்திய அதிரடித் தாக்குதல்களில் 04 ஏ. கே. எல் எம். ஜி. துப்பாக்கிகள், 20 ஏ. கே. ரக துப்பாக்கிகள், 16,788 நடுத்தர ரவைகள், 28 கைக்குண்டுகள், 33 ஷெல்கள் உட்பட பெருமளவுராணுவதளபாடங்களை விடுதலைபுலிகள் கைப்பற்றியுள்ளார்கள்.

திருமலை, மூதூர் பகுதியிலுள்ள ராணுவம் மீதான தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம்:
ஃ ஏ கே. எல். எம். ஜி;

(5ம் பக்கம் பார்க்க)

## அதிகரித்து வரும் யுத்த செலவினால் அரச தரப்பில் பெரும் குழப்பம்!

(கொழும்பு)
வடக்கில் இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்ததினால் ஏற்பட்ட அதிகரித்த யுத்த செலவீட்டை எவ்வாறு சமாளிப்பது என்பது குறித்து அரசு குழம்பிப்போயுள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

இந்த யுத்த செலவீனத்தால் அரசு கடும் நிதிப்பற்றாக் குறையை எதிர்நோக்கியிருப்பதாக கொழும்புப்பத்திரிகையை மேற்கோள் காட்டி 'வெரித்தாஸ்' தெரிவித்தது.

இம்மேலதிக நிதிச்செலவீனத்தை சமாளிப்பதற்காக தனியார் துறையிடமிருந்து கடனாக நிதியுதவியைப்பெற அரசு முயல்வதாகவும் வெரித்

(5ம் பக்கம் பார்க்க)

## அரசின் முன்னேக்கிபாய்தல் வெற்றியளிக்கவில்லை

(லண்டன்)
அரசின் 'முன்னேக்கிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கை வெற்றியளிக்கவில்லை என தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இதுகுறித்து லண்டன் பி. பி. சி. நேற்றிரவு ஒலி பரப்பிய செய்தியறிக்கையில் இந்த இராணுவ நடவடிக்கையை கைவிடவேண்டுமெனவும், இராணுவ நடவடிக்கையின்போது பொதுமக்கள் கொல்லப்படமாட்டார்கள் என உத்தரவாதமளிக்கவேண்டுமெனவும் இவ்உறுப்பினர் கேட்டுள்ளதாகத் தெரிவித்தது. -ம-கி-ரி

## வடக்கில் படை நடவடிக்கை திட்டமிட்டபடி நடைபெறும்

–ரத்வத்த

(கொழும்பு)
வடபகுதியில் 'முன்னேக்கிப்பாய்தல்' இராணுவ நடவடிக்கை திட்டமிட்டதற்கமைய தொடருமெனவும், குறுகிய காலததிற்குள் இதனை முடிவுக்குக் கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்த நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்,

இந்நடவடிக்கை தொடர்பான முழுவிபரங்களையும் தெரிவிக்கமுடியாதெனவும், அவற்றை ஓரளவுக்குத்தான் வழங்கமுடியுமெனவும் இல்லை

(5ம் பக்கம் பார்க்க)

## இலங்கை தமிழ் அகதிகள் தமிழகத்தில் உண்ணாவிரதம்

(சென்னை)
தமிழகத்தில் அகதிமுகாம்களிலுள்ள பெருமளவு இலங்கைத் தமிழ் அகதிகள் நேற்று முன்தினம் உண்ணாவிரதப் போராட்டமொன்றை நடாத்தியுள்ளனர்.

இலங்கையில் நடைபெறும் போரை முடிவுக்கு கொண்டுவர இந்திய அரசு இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டுமென்றும், இலங்கையில் தமிழர்கள் கொலலப்படுவது நிறுத்தப்படவேண்டுமென்றும் கோரியே இந்த உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

நெல்லை, கட்டபொம்மன், சிதம்பரனார் மாவட்டங்களிலுள்ள அகதிமுகாம்களிலுள்ள தமிழ் அகதிகளே உண்ணாவிரதமிருந்தனர். சி-ரி


உ
யாழ். வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி (வண்ணை சிவன் கோவில்)

★ தேவி மஹோற்சவம் - கொடியேற்றம் ★

இன்று (22 - 7 - 95) சனிக்கிழமை நண்பகல் 12-00 மணி

மங்கள இசை : திரு. என். கே. பத்மநாதன் குழுவினர்

[ஏ-5128] தேவஸ்தானம்.

## வரி விளம்பரம்

### தேவை

வெற்றுஜாம் (JAM) போத்தல்கள், பிளாஸ்டிக் மூடியுடன் கூடிய வீவா, ஹார்லிக்ஸ் போத்தல்கள் எம்மால் கொள்வனவு செய்யப்படுகிறது: ரேஸ்ட் லேன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டெட். 14, சீனியர் ஒழுங்கை யாழ்ப்பாணம். [ஏ-5115]

### தேவை

செவ்வாய்க் குற்றமற்ற ஆனுல் பாவம் கூடிய ஆண் பட்டதாரி ஆசிரியர்கள் எம்மிடம் உண்டு, இ. பாஸ்கரன் திருக்குமரன் மங்கள ஏஜன்சி இல: 41, பிரப்பங்குளம் வீதி, வண்ணார்பண்ணை. (சி 1564)

### சேவை

சகலவிதமான கதிரைகளும் உங்கள் வீட்டுக்குவந்து பின்னித் தருபவர்கள். ராஜன் பின்னல் அகம் 286, ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம் சந்தி. (சி 1562)

University of Jaffna

## TenderNotice

Ref. the tender notice published recently for the "Repairs to septic tank behind Dept. of Chemistry"

Tender forms can be collected till 27-7-95.

Perfected tenders should be sent to reach Registrar, University of Jaffna not later than 10.00 a.m. on 8.8.95.

**Registrar**
University of Jaffna,
P O Box 57.
Jaffna.

(A 5122)

## உடுபிடவை சேகரிப்பு

(நப்லூர்)

கடந்தவாரம் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி அளிக்க உடு புடவைகள் சேகரித்து வழங்க யாழ் மரியன்னை பேராலய பங்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி பங்குமக்களிடம் உடு புடவைகள் சேகரிக்கப் பட்டு வருகின்றன.

175-சி

## ம. எண்ணெ விநியோகம்

(யாழ்ப்பாணம்)

''மாகோ', கப்பலில் அரசாங்க திணைக்களங்களுக்கு மண்எண்ணெ வந்து சேராததினுல் யாழ். செயலகமே மண் எண்ணெயை வழங்கவுள்ளது.

யாழ். செயலகத்துக்கும் 1950 பரல் மண்எண்ணெ ''மகோவில்'' எடுத்து வரப் பட்டது.

இம்முறை மிககுறைந்தளவு மண்எண்ணெ வந்து சேர்ந்திருப்பதால் செயலகமும் இத் திணைக்களங்களுக்கு மண்எண்ணெயை மட்டுப்படுத்தியே வழங்கும் என்றும் செயலக வட்டங்கள் தெரிவித்தன.

170-ரி

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995 – 07 - 22**
சனி இரவு

8-02 புரட்சிக்குரல்
8-05 நிகழ்வும் பகிர்வும்
8 20 நேயர் கடிதங்கள்
8-30 செய்திகள்
8-40 கவியரங்கம் — ''தமிழீழம் பூமியில் தோன்றும்'

**1995–07–23**
ஞாயிறு காலை

7-02 மாவீரவணக்கம்
7-15 களத்தில் மலர்ந்தவை
7-30 செய்திகள்
7-35 பத்திரிகைச் செய்திகள்
7-45 களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995–07–22**
சனி மாலை

5-01 சிந்தனைச் சிதறல்
5 02 எழுச்சிகீதம்
5-10 புதியவை
5-15 வேங்கையின் நெஞ்சம்
5-30 அறிவியல் வினுடி வினு
6-00 சிந்தனைக்குச் சிலவினுடிகள்
6-10 செய்திகள்
6-15 என் தெரிவு
6-30 மாலைநிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

## இரவு நேர ஷெல் வீச்சு

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமிலிருந்து பத்தமேனி, அச்சுவேலிப் பகுதிகளை நோக்கித் தினமும் இரவு நேரங்களில் ஷெல் வீச்சு நடைபெற்று வருகிறது.

இராணுவத்தினரின் இரவு நேரச் ஷெல் வீச்சைத் தொடர்ந்து மக்கள் இப்பகுதிகளில் இரவில் தங்குவதற்கு அஞ்சுகின்றனர். இவர்கள் பகலில் தமது வீடுகளில் தங்கி இருந்துவிட்டு இரவு நேரத்தில் புத்தூர்ப் பகுதிகளில் வந்து தங்குவதாகவும் தெரியவருகின்றது.

162 சி

# கழுத்துறையில் சிங்கள-முஸ்லிம் இன கலவரம் வெடிக்கும் அபாயம்

(கொழும்பு)

கழுத்துறையில் முஸ்லிம், சிங்கள மக்களுக்கிடையே இனக்கலவரம் தோன்றும் அபாயம் அதிகரித்திருப்பதாக அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 18ம் திகதி செவ்வாய்க்கிழமை நடந்த கிரிக்கெட் போட்டி ஒன்றின் முடிவினை ஆட்சேபித்து மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலைத் தடுக்க பொலிசார் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதில் 4 முஸ்லிம் மாணவர்கள் கொல்லப்பட்டதோடு 20 மாணவர்கள் காயமடைந்ததும் தெரிந்ததே.

இச் சம்பவத்தையடுத்தே கழுத்துறைப் பகுதியில் சிங்களவர்கள், முஸ்லிம்களுக்கிடையே பதற்றம் நிலவி வருவதாகவும் இது இனக் கலவரமாக வெடிக்கலாம் எனவும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து அப் பிரதேசத்தில் பெருமளவு விமானப் படையினர் குவிக்கப் பட்டுள்ளனர். இனக்கலவரம் ஒன்று வெடிக்காமல் பாதுகாத்துக் கொள்ளுமாறு முன்னுள் அமைச்சர் ஹமீத் அரசைக் கேட்டுள்ளார்.

ர-சி

## இராசி பலன்

22–07–1995
சனிக்கிழமை

**(தமிழுக்கு ஆடி–6)**

தசமி நண்பகல்12 24வரை; கார்த்திகை மு. இ. 10-22 வரை, அமிர்தயோகம், கார்த்திகை விரதம், இராகுகாலம் காலை 9-01 முதல் 10 31வரை; சுபவேளை மாலை 3-01 முதல் 4-31 வரை.

மேடம்: தொழில் கஷ்டம், அமைதிக் குறைவு, காரிய தடை.

இடபம்: இனசன வருகை, தாயன்பு, பயண ஒழுங்கு.

மிதுனம்: பகைவர் தொல்லை பணமுடை, அலைச்சல்.

கடகம்: வாக்கு வன்மை, முயற்சி பலிதம், நண்பர் உதவி.

சிங்கம்: புதிய முயற்சி, தொழில்லாபம், நன்மதிப்பு,

கன்னி: குடும்ப கஷ்டம், சகோதரி பகை, மனச்சுமை.

துலாம்: துயரமடைதல், பதவிமாற்றம். கோபவார்த்தை.

விருச்சிகம்: விவேகமான செயல், உறவினர் பாராட்டு, பொதுப்பணி.

தனுசு: புத்திரர் பெருமை, புதிய மாற்றம், கடன் வரவு.

மகரம்: வேலைப்பழு, முதியவர் துன்பம், அகால உணவு.

கும்பம்; ஏமாற்றம், கண்டிப்பு, மனவெறுப்பு.

மீனம்: வருமான அதிகரிப்பு தொழில் உறவு, மனநிறைவு.

— ஜோஸ்யர்

## வரி செலுத்துவோருக்கான சிறப்புக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வரி செலுத்துவோருக்கான சிறப்புக் கூட்டங்களை நடத்துவதற்கு வருவாய்ப்பகுதி ஏற்பாடுகள் செய்துள்ளது. கீழ்க் காணும் விபரப்படி நடைபெறவுள்ள இச்சிறப்புக் கூட்டங்களுக்கு அவ்வப் பகுதிகளைச் சேர்ந்த வரிக்குட்பட்ட வாணிப உரிமையாளர்களை தத்தமது வரி ஆவணத்துடன் குறித்த நேரத்திற்கு தவருது வருகை தருமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித் துறையினர் கேட்டுள்ளனர்.

### வலிகாமம்

யாழ்ப்பாணம், நல்லூர். கோப்பாய் உ. அ. அ பிரிவுகள் 23ம் திகதி (ஞாயிறு) மு. ப. 10-30 மணிக்கு குமாரசாமி மண்டபம், யாழ். இந்துக்கல்லூரி.

### தென்மராட்சி

தென்மராட்சி பச்சிலைப் பள்ளி உ. அ. அ. பிரிவுகள் 23ம் திகதி (ஞாயிறு) பி. ப 3-00 மணிக்கு டிறிபேக் கல்லூரி சாவகச்சேரி.

### வடமராட்சி

கரவெட்டி, பருத்தித்துறை வடமராட்சி கிழக்கு உ. அ. அ. பிரிவுகள் 24ம் திகதி (திங்கள்) பி. ப. 3-00 மணிக்கு மத்திய கல்லூரி நெல்லியடி.

வி சி

## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்

## தொழில்திறன் அபிவிருத்தி பயிற்சி நெறிகள்

1. தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்து பயிற்சி நெறி
2. ஆங்கில தட்டச்சு சுருக்கெழுத்து பயிற்சி நெறி
3. தையல் இயந்திரம் திருத்தற் பயிற்சி நெறி
4. நீர் இறைக்கும் இயந்திரம் திருத்தற்பயிற்சி நெறி
5. உடையமைத்தல் பயிற்சி நெறி

ஆகிய பயிற்சி நெறிக்கு தெரிவுசெய்யப்பட்டோர் எதிர்வரும் 24-07-95, 25-07-95 ஆகிய திகதிகளில் காலை 9 00 மணிக்கு எமது காரியாலயத்தில் பதிவை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்ருேம்.

★ பயிற்சி நெறிகள் அனைத்தும் 02-08-95 அன்று ஆரம்பமாகும்.

உப தலைவர்
அ. நல்லதம்பி

(எ 5129)

## தொழில்நுட்பக்கல்லூரி, யாழ்ப்பாணம்

## விரிவுரைகள்

இக்கல்லூரியின் பயிற்சிநெறிகளுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 1995-07-24-ம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும், எனவும் விரிவுரையாளர்கள் மாணவர்கள் யாவரையும் சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

க. ஜெயரட்ணம்
அதிபர்.

தொழில்நுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
1995-07-21.

(ஏ 5125)




(ஏ-5118)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

நல்லூர் கந்தசுவாமி கோவில்

1995ஆம் ஆண்டு

மஹோற்சவ கால

## தற்காலிக கடைகள்

மேற்படி விடயமாக இதே பத்திரிகையில் ஏற்கனவே வெளிவந்த விளம்பரம் தொடர்பாக கேள்விப் படிவம் பெறுவதும் கேள்வி ஏற்பதுமான திகதிகள் பின்வருமாறு மேலும் நீடிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கேள்விப்படிவம் பெறும் இறுதித் திகதி :
27 – 07 – 95 பி. ப. 3–00 மணி.

கேள்வி ஏற்கப்படும் இறுதித் திகதி :
28 – 07 – 95 ந. ப. 12 00 மணி.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சிமன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
1995 - 07 - 20.

(ஏ-5127)

### மணிவாக்கு

''மற்றவர்கள் கண்டுபிடிக்காமல் அவர்களை ஏமாற்றுவது எவ்வளவு கடினமோ, அந்த அளவு, தானே அறியாமல் தன்னை ஏமாற்றுவது எளிது''

—ரோஷ்புக்கோ

## நமது நோக்கு

### மன்னிப்புச் சபை கண்டனம்

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் ஏன் சிறிலங்காவின் சகல சிங்களப் பகுதிகளிலும் தமிழர்கள், தமிழர்கள் என்ற காரணத்துக்காக கைது செய்யப்படுவது, சித்திரவதை செய்யப்படுவது, பெண்கள் என்றால் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்படுவது, கொல்லப்படுவது, பின்னர் அவர்களின் உடல்கள் ஆறுகளிலும் வாவிகளிலும் மிதக்கவிடப்படுவது என்பது சந்திரிகாவின் ஆட்சியில் இப்போது சர்வசாதாரணம்.

அரசு இந்த வன்முறைகளை தமிழர்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிட்டது பௌத்த சிங்கள பேரினவாத இன ஒழிப்பு நடவடிக்கையின் ஒரு அம்சமாகும். இதனால் தமிழர்கள் உடல், உடமை, உளரீதியாகப் பெருமளவில் பாதிக்கப்படுகிறார்கள்.

இராணுவத்தினரும் பொலிஸாரும் தமிழருக்கு எதிரான இந் நடவடிக்கையை அரசின் ஆணையின் படியே செயல்படுத்துகின்றனர். இந் நடவடிக்கை ஐ: தே. க வின் பிரேமதாசா ஆட்சியின்போது தன் ஆட்சிக்கு எதிரானவர்களை காணாமல் போகச் செய்ததற்கு ஒப்பானதாகும். அவர் இந் நடவடிக்கைகளைச் செய்வதற்கு ஒரு இளைப்பாறிய உதவிப் பொலிஸ்மா அதிபரின் தலைமையில் ஒரு திணைக்களத்தையே உருவாக்கிச் செயல்படுத்தினார். அரசுக்கெதிரான றிச்சாட் டி சொய்சா போன்ற சிங்கள கலைஞர்கள், புத்திஜீவிகள் ஆகியோர் கடத்தப்பட்டு பின்னர் சடலமாக கண்டெடுக்கப்பட்டனர்,

சந்திரிகாவின் அரசு பிரேமதாசா நடந்துகொண்டதுபோல் இப்போது தமிழ்மக்களைப் பொறுத்தளவில் நடந்துகொள்கிறது. பிரேமதாசா தனது 'காணாமல் போகும்' நடவடிக்கையில் ஈடுபட்டபொழுது தனது செயலை மற்றவர்கள் கண்டுகொள்ளமாட்டார்கள், கேள்வி கேட்கமாட்டார்கள் என்ற ஒரு போலித் துணிவுடன்தான் செயல்பட்டார். ஆனால் அவர் கொல்லப்பட்ட பின்னர் உண்மைகள் வெளிவந்தன. சந்திரிகாவும் தன்னுடைய செயல்கள் மற்றவர்களால் கண்டுபிடிக்கப்படமாட்டாது என்ற எண்ணத்துடன் தான் செயல்படுகிறார். அதுவுமல்லாமல் இந்நடவடிக்கைகள் தமிழர்களுக்கு எதிரானதானதால் சிங்களவர்கள் மத்தியில் வரவேற்பையும் பெறும். சிங்களவர்களைப் பொறுத்தளவில் தமிழர்கள் கிள்ளுக்கீரைகள்.

ஆனால் சந்திரிக்கா எதிர்பார்ப்பது போல் உலக மக்கள் போதை மருந்து உட்கொண்டுவிட்டு நித்திரை கொள்பவர்கள் அல்ல. சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற அமைப்புகள் விழிப்பாகத்தான் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. சிறிலங்கா அரச படைகள் யாழ்ப்பாணத்தில் நடத்திய ''முன்னேறிப்பாய்தல்'' இராணுவ நடவடிக்கையின்போது அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதையும், போர் இடைநிறுத்தம் முறிந்த பின்னர் தமிழ் மக்கள் தகுந்த காரணம் இன்றியும் போதிய விசாரணைகள் இன்றியும் கைது செய்யப்படுவது குறித்தும் கைது செய்யப்படுவோர் மனிதாபிமானமற்ற முறையில் கொலைசெய்யப்படுதல் சித்திரவதை வன்முறைகளுக்கு உட்படுத்துதல், பெண்களை பாலியல் வன்முறைக்கு உட்படுத்துதல் குறித்தும் சர்வதேச மன்னிப்புச்சபை சிறிலங்கா அரசைக் கண்டித்துள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபை சிறிலங்கா தொடர்பாக மூன்று அறிக்கைகளை வெளியிட்டுள்ளது. அவற்றிலேயே அரசாங்கம் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவதை நிறுத்தவேண்டும் என்று மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது மேலும் இந்த அறிக்கைகளில் நீதித்துறைக்கு அப்பாற்பட்டவகையில் மேற்கொள்ளப்பட்ட மரணங்கள் தொடர்பாகவும் மன்னிப்புச் சபை தனது கவலையைத் தெரிவித்துள்ளது. சந்திரிகாவின் அரசாங்கம் இனப்படுகொலைகளை செய்துவிட்டும் மனித உரிமைகளை மீறி விட்டும் தப்பிக்கொள்ளலாம் என்றால் அது நடவாத விடயம்; சம்பந்தப்பட்ட மக்களுக்காகப் போராடுபவர்களாலும் விழிப்போடு இயங்கும் உலக அமைப்புகளாலும் தட்டிக்கேட்கப் படுவார். தண்டனையும் அவருக்கு வழங்கப்படும்.

இந்த வகையில் இராணுவ நடவடிக்கைகளின் போது அப்பாவித் தமிழ் மக்களை கொன்று குவிப்பதில் ஈ. பி. டி. பி யினரும் ஈடுபடுகின்றனர் என்ற தகவல்கள் வெளிவந்துள்ளன. சிறிலங்கா இராணுவத்தினருடன் ஒன்றிணைந்து போராடும் ஈ. பி. டி. பியினர் இந்தியாவின் உளவுப்படையான 'றோ' வுடன் இணைந்து தனது படைக்குத் தேவையானவர்களை இந்தியாவில் பணங் கொடுத்து ஆட்சேர்ப்பு செய்கின்றனர். இந்தியா, தான் சிறிலங்கா அரசுக்கு இராணுவ உதவி வழங்கவில்லை என்று கூறிக்கொண்டு மறைமுகமாக தனது 'றோ' வின் மூலம் ஈ. பி. டி. பியினருக்கு பண உதவிகளைக் கொடுத்து இந்தியர்களை தமிழர்களுக்கு எதிராக போராடுவதற்கு ஆட்சேர்ப்பித்தலில் உதவி வழங்குகிறது எனத் தகவல்கள் கூறுகின்றன ஆகவே அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிராக அநியாயமான முறையில் செயல்படும் இந்தியாவும் ஈ. பி. டி. பி துரோகிகளும் உலக மனித உரிமை அமைப்புகளால் கண்டிக்கப்பட வேண்டும். இத்தகைய இழிதொழிலில் ஈடுபடுவதிலிருந்து அவர்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

## ஐக்கிய இலங்கை இருக்குமா! என்பதே தற்போதைய பிரச்னை சந்திரிகா கவலை

(கொழும்பு)

''தற்போது பிரச்னை, இலங்கை தொடர்ந்தும் ஐக்கிய இலங்கையாக இருக்குமா? அல்லது இல்லையா என்பதாகும்',

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை, நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றும் போது இவ்வாறு அவர் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

அனைவரும் அரசியல் போராட்டத்தை முன்னெடுத்து பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண முனைதல் வேண்டும்.

இலங்கை பலம் பொருந்திய நாடாக முன்னேற்றமடைவதற்கு யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும், அரசியல் தீர்வு காண்பதற்கு அரசியல்வாதிகள் மற்றும் ஆயுதபடையினரின் ஆதரவு கிடைத்துள்ளது இந்தப் பிரச்னையை தீர்த்துவைக்க மக்கள் தங்கள் ஆணையைவழங்கியும் உள்ளார்கள்.

இராணுவ வழியில் பிரச்னைக்கு தீர்வு காண முடியாது என்பதை மக்கள் உணர்ந்து கொண்டார்கள். யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர அரசு தீர்மானித்துள்ளது;

கடந்த 12 வருடங்களாக உயிருக்கும் உடமைகளுக்கும் பெரும் சேதம் ஏற்படுத்திய இந்த யுத்தம் விரைவாக முடிவுக்கு கொண்டு வரப்படுவது இன்றியமையாத ஒன்றாகும்.

12 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பமான இந்த யுத்தம் இப்பொழுது தெளிவான நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறைந்தபட்ச இழப்புகளுடன் இது வெற்றி அளிக்கும்.

பிரச்னைக்கான தீர்வுத்திட்ட யோசனைகளை மக்களுக்கு சமர்ப்பிக்க அரசாங்கம் தயாராக உள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

கே-சி

## பலத்த பாதுகாப்புடன் கப்பல்களில் கிழக்கிலிருந்து துருப்புகள் வருகின்றன

(கொழும்பு)

யாழ்: குடாநாட்டில் இராணுவ துருப்புக்களை குவிக்கும் முகமாகவே மட்டக்களப்பு பகுதியில் இராணுவ முகாம்கள் பல மூடப்பட்டு வருவதாக இராணுவ தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ். மாவட்டத்தில் அண்மையில் படையினர் மேற்கொண்ட 'முன்னேறிப்பாய்தல்' இராணுவ நடவடிக்கையின்போது படையினருக்கு ஏற்பட்ட பின்னடைவை ஈடுசெய்யுமுகமாகவே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் அச்செய்தி மேலும் தெரிவித்துள்ளன.

இதேவேளை கடற்புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சி பலத்த பாதுகாப்புடன் கப்பல்கள் பல காங்கேசன் துறைக்கு வந்து செல்வதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கப்பல்களில் ராணுவ துருப்புக்கள் பெருமளவில் காங்கேசன் துறைக்கு கொண்டுவரப்பட்டு குவிக்கப் படுவதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

க-சி

## சென்னையில் இலங்கைத் தூதரகத்தை உடனடியாக மூடவேண்டும் நெடுமாறன் கோரிக்கை

(சென்னை)

சென்னையிலுள்ள, இலங்கையின் துணைத் தூதரகத்தை உடனடியாக மூடவேண்டுமென தமிழ் தேசிய இயக்கத் தலைவர் திரு. ப. நெடுமாறன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுபற்றி அவர் பி பி. ஸிக்கு தெரிவிக்கையில் இலங்கையில் தமிழருக்கு எதிரான இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுத்தும் நோக்கில் இந்திய உளவு நிறுவனமான 'றோ'வுடன் சேர்ந்து சென்னையிலுள்ள இலங்கை துணைத்தூதரக அதிகாரிகள் செயற்பட்டு வருகின்றனர்.

ஈ-பி-டி-பி அமைத்து வரும் கூலிப்படையிலேயே இந்திய இளைஞர்களை பணம் கொடுத்து சேர்க்கும் முயற்சியை தற்போது 'றோ' மேற்கொண்டு வருகிறது. இதற்கு இலங்கை துணைத் தூதரகமும் முழு உதவிகளையும் வழங்குகிறது.

இவ்வாறு சேர்க்கப்பட்ட கூலிப்படையில் ஒரு பகுதியினர் அண்மையில் நெடுந்தீவு சென்றுள்ளனர் மேலும் பலர் அங்கு அனுப்பப்படவுள்ளனர். இந்து கூலிப்படைக்கு சேர்க்கப்பட்ட ஒரு இளைஞன் அண்மையில் அவர்களிடமிருந்து தப்பிவந்து இத்தகவலை தனக்குத் தெரிவித்தாதகவும் திரு நெடுமாறன் தெரிவித்தார்.

சி

### பலதும் பத்தும்

#### பிரமிட் வடிவம்

பிரமிட் அமைப்பைப் பற்றி ஆய்வு செய்தவர்கள் பல சுவையான தகவல்களை வெளியிட்டிருக்கிறார்கள். அந்த அமைப்புக்குள் வைக்கப்படும் பொருட்களின் தன்மைகள் மாறுகின்றன; உணவுப் பொருட்களின் சுவை மாறுகின்றன.

உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் நச்சுப் பொருட்கள் நீங்கப் பெற்று, உடல் கெடாமற் பாதுகாக்கப்படுகின்றது. பிரமிட் போன்ற அமைப்புக்குள் வசிப்பவர்களின் மன நிலை மாறி விடுமாம் எண்ணச் சிதறல்கள் தடுக்கப்படுகின்றன.

சிகரட்டுகளை வைத்துப் பார்த்ததில் அதன் ''நிக்கட்டின்'' விஷம் நீங்கியுள்ளது தொட்டிலிற்கு மேல் பிரமிட் வடிவத்தைத் திறந்த வடிவாக அமைக்க அதில் தூங்கும் குழந்தைக்கு உடல் நலம் ஏற்படுமாம்...! பிரமிட் அமைப்பிற்குள் வைத்த நீரால் முகம்கழுவ முகப்பரு நீங்கும்; காய்கறி அழுகாமல் இருக்கிறது.

—மயூரன்

## அகதி முகாம்கள் மூடப்பட்டு வருகின்றன

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பகுதி வழமைக்கு திரும்பியதை அடுத்து யாழ். குடா நாட்டில் உள்ள இடம் பெயர்ந்தோர் முகாம்கள் மூடப்பட்டு வருகின்றன.

இடம் பெயர்ந்த மக்கள் தற்போது வலிகாமம் மேற்கில் தமது இருப்பிடங்களுக்கு திரும்பிச் சென்றுள்ளனர்.

எனினும் சிலர் மீண்டும் தமது இருப்பிடங்களுக்கு செல்வதற்கு அஞ்சி ஒரு சில முகாம்களில் தொடர்ந்து தங்கியுள்ளனர். தற்போது யாழ் மாநகரப் பகுதியில் இரண்டு முகாம்களிலேயே மக்கள் தங்கியுள்ளனர்.

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்திலும், கந்தர் மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்திலும் குறைந்தளவு மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

170-சி

## வீடு பார்க்கச் சென்ற இளைஞனைக் காணவில்லை

(வட்டுக்கோட்டை)

சங்கானை சேத்துப்பிடிச்சி வீதியைச் சேர்ந்த செபமாலை மகாலிங்கம் (வயது 20) என்பவர் கடந்த 10ம் திகதி முதல் காணாமற்போயுள்ளதாக சங்கானை காவல்துறை பணிமனையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சங்கானையில் இருந்து இடம் பெயர்ந்து சுதுமலைக்குச் சென்ற இவர் சுதுமலையில் தமது பெற்றோருடன் நின்றுவிட்டு கடந்த 10ம் திகதி சங்கானைப் பகுதியில் உள்ள தங்கள் வீட்டைப் பார்த்து விட்டு வருவதாகச் சென்றதாகவும் அவரை இதுவரை காணவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அவ்வேளை இப்பகுதியில் இராணுவத்தினர் நிலை கொண்டிருந்ததால் அவர்கள் பிடித்துச் சென்றிருக்கலாம் எனவும் கருதப்படுகிறது.

139-சி

# ஆட்டோ குண்டு வெடித்ததில் ஜம்முவில் 20 பேர் உயிரிழப்பு

(சிறிநகர்)

ஜம்மு-காஷ்மீர்ப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை குண்டு ஒன்று வெடித்ததில் 20 பேர் ஸ்தலத்தில் பலியாகினர். 60பேர் படுகாயமடைந்தனர்.

மாலைவேளையில் மாநிலத்தால் நடத்தப்படும் பள்ளி ஒன்றின் அருகே நிறுத்தப்பட்டிருந்த ஆட்டோ றிக்சோ ஒன்றில் திடீரன அதிசக்தி வாய்ந்த குண்டு வெடித்துச் சிதறியது.

இக்குண்டு வெடிப்புக்கு பாகிஸ்தான் முஸ்லிம் போராளிகளும், ஆப்கானிஸ்தான் தீவிரவாதிகளுமே பொறுப்பாக இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இப்பகுதியில் உள்ள குடிசைகள் சிலவற்றை மூன்று முஸ்லிம் போராளிகள் தீ வைத்துக் கொளுத்தியதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஒரு நாள் ஹர்த்தாலுக்கு பி. ஜே. பி. மற்றும் ஆர். எஸ். எஸ். என்னும் இந்து தீவிரவாத அமைப்புக்களின் அறிவிப்பு வெளிவந்ததும், இக்குண்டு வெடிப்பும் சமகாலத்தில் நிகழ்ந்தது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானியக் கூலிப்படையினரே இவ்வகையான குண்டு வெடிப்புக்களை நிகழ்த்தி, இப்பகுதியில் குழப்பத்தை விளைவிக்க முயல்கின்றனர் என அதிகாரிகள் தெரிவித்தனர். இதற்கு முன்னர் இதுபோன்ற குண்டு வெடிப்புக்கள் இவர்களால் நிகழ்த்தப்பட்டன.

ஜம்மு-காஷ்மீர் ஆளுநர் மக்களைப் பொறுமையாக இருக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜம்மு-காஷ்மீரில் குண்டு வெடிப்புகளும், கடத்தல்களும், துப்பாக்கிப் பிரயோகமும் அதிகரித்துக்கொண்டே வருவது குறிப்பிடத்தக்கது. கே-சி

# உலக முன்னணி ஆட்டக்காரர்கள் ஒரே ஆட்டத்தில் மோதுவர்

(டோக்கியோ)

கடந்த ஜனவரி மாதம் ஜப்பானில் பூமியதிர்ச்சினால் பாதிக்கப்பட்டோருக்கு நிதிதிரட்டும் வகையில் உலகின் பிரபல ஆட்டக்காரர்கள் கலந்து கொள்ளும் உதைபந்தாட்டப் போட்டியொன்று எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 30ம் திகதி டோக்கியோவில் நடாத்தப்படவுள்ளது.

பிறேசில் நாட்டின் தலைசிறந்த வீரர்பீலி இப்போட்டியில் ஒரு அணியின் தலைவராக கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மற்றும் உலகின் பிரபல உதைபந்தாட்ட ஆட்டக்காரர்கள் ஒரே மைதானத்தில், ஒரே நேரத்தில் இவ் ஆட்டத்தில் மோதவுள்ளனர். -கி

# பாக். ற்கு ஆயுதம் வழங்க அமெரிக்கா மீண்டும் முடிவு

(புதுடில்லி)

பாகிஸ்தானுக்கு ஆயுதங்களை விற்பனை செய்வதற்கு பல ஆண்டுகால இடைவெளிக்குப்பின் அமெரிக்கா மீண்டும் முடிவெடுத்துள்ளதற்கு இந்தியா பலதத ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

இவ்வாறு அமெரிக்காவும், சீனவும் பெருமளவில் பாகிஸ்தானுக்கு ஆயுதங்களை வழங்குவாதல் அதன் தாக்கும் திறன் அதிகரிக்குமென வும் இது இந்தியாவுக்கு பலத்த அச்சுறுத்தலாக அமைவதாகவும் இந்தியா வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பிரதாப முகர்ஜி கூறியுள்ளார்.

இதற்கு ஈடாவதற்காக புதிய ஆயுதங்களை கொள்வனவு செய்வதைவிட இந்தியாவுக்கு வேறுவழியில்லை எனவும் அவர் செய்தியாளர்களிடம் கூறினர். -கி

## நாடாளுமன்றில்

# ஈ. பி. டி. பி. யின் பகிஷ்கரிப்பால் அரசுக்கு நெருக்கடி ஏற்படலாம்

(கொழும்பு)

ஈ. பி. டி. பி. நாடாளுமன்றைப் பகிஷ்கரித்து வருவதால், அரசுக்குச் சிக்கல்கள் ஏற்படும் நிலை தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமன்றில் சிறுபான்மைத் தமிழ்க் கட்சிகளின் ஆதரவிலேயே பொதுசன ஐக்கிய முன்னணி அரசு தங்கியுள்ளதால், தற்போதைய நிலையில் நாடாளுமன்றில் அரசுக்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணை ஏதும் வரும் பட்சத்தில் அது அரசுக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்திவிடும்.

இந்நிலையில் நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பைக் கைவிடுமாறு ஈ. பி. டி. பியை அமைச்சர் வீரக்கோன் கேட்டுள்ளார். இது குறித்து அவர் ஈ.பி டி.பி.யினருடன் பேச்சுக்கள் நடாத்தியுமுள்ளார்.

இதேவேளை தாம் முன்வைத்த நாடாளுமன்றைப் பகிஷ்கரித்துவரும் ஐந்து கோரிக்கைகள் தொடர்பாக, ஈ பி டி.பி.யினர் விரைவில் ஜனாதிபதி சந்திரிகாவை சந்தித்துப் பேச்சுக்கள் நடாத்த உள்ளனராம். சி

# இராணுவத்துக்கு ரணில் உடுபிடவை அன்பளிப்பு

(கொழும்பு)

வடக்கு இராணுவ நடவடிக்கையில் பங்குபற்றிய இராணுவத்தினருக்கென எதிர்க்கட்சித்தலைவரும் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவருமான ரணில்விக்கிரமசிங்க ஒருலட்சம் ரூபா பெறுமதியான உடுபிடவைகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இவை இராணுவ தளபதியிடம் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்டன. இவற்றில் அனேகமானவை தைக்கப்பட்ட ஆடைகளாகும். இ.சி

# வீதி விபத்தில் வயோதிபர் மரணம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிப் பகுதியில் வீதி விபத்துக்குள்ளாகி, ஆபத்தான நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் இருந்து யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட வயோதிபர் ஒருவர் மரணமானார்.

இனந் தெரியாத இந்நபரின் வார்ட் அனுமதிப் பத்திரத்தில் செல்லர் என்ற பெயர் மாத்திரம் பதியப்பட்டுள்ளது.

வெள்ளைச் சாரம் அணிந்த சுமார் 70 வயது மதிக்கத்தக்க இந்த வயோதிபரின் சடலம் இனம் காண்பதற்காக வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. 90 சி

# வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் தேவி மகோற்சவம் இன்று சனிக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர் உற்சவமும் 31ம் திகதி திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

## பாடசாலைப் பிள்ளைகள் கடத்தல்

(கொழும்பு)

கம்பளைப் பகுதியில் தற்போது பாடசாலைப் பிள்ளைகள் கடத்தப்படும் சம்பவம் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாகனம் ஒன்றில் கடந்த வாரம் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் சிறுவர்களில் இருவர், மாயாவத்த, அங்கமன பகுதிகளிலிருந்து தப்பி வந்ததாகவும் தெரியவருகிறது.

வாகனங்களில்வந்து பிள்ளைகளைக் கடத்திச் செல்லும் இவ்வினந் தெரியாத நபர்களைத் தேடும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். ர-ரி

# சுகாதார ஊழியர்களை கடமைக்கு திரும்ப பணிப்பு

(யாழ்ப்பாணம்)

தற்போது நிலமை இயல்பு நிலைக்கு வந்துள்ளதால் யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் திணைக்களத்தைச் சேர்ந்த அனைத்து அலுவலர்களையும் தத்தம் கடமைத்தளத்திற்கு உடனடியாக சமுகமளிக்குமாறு மாகாண பிரதிப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

தற்காலிகமாக என்றால் வேறு கடமை நிலையங்களுக்கு செல்லுமாறு ஏற்கனவே பணிக்கப்பட்டவர்களும் தமது முன்னைய, நிரந்தர வைத்திய நிறுவனங்களுக்கு கடமைக்கு உடனடியாக செல்லுமாறும் கேட்டுள்ளார். 162

# இடம்பெயர்ந்தோருக்கு பொருட்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சனசமூக நிலையங்களின் சமாசம், சென் ஜோன்ஸ் கல்லூரியில் தங்கியிருந்த இடம் பெயர்ந்த மக்களுக்கு உடுபிடவைகள், சமையல் பாத்திரங்கள் மற்றும் உலர் உணவுகளை நேற்று முன்தினம் புதன்கிழமை வழங்கியது.

சமாசத் தலைவர் கப்டன் டி. ஏ. எம். குணசிங்கம், முகாம் பொறுப்பாளரும், கிராம சேவையாளருமான ம. சுந்தரலிங்கத்திடம் இப் பொருட்களைக் கையளித்தார்.

கரவெட்டி, கரணவாய் மேற்கு சோளங்கன் சனசமூக நிலையம், கரணவாய் தெற்கு விவேகானந்தா சனசமூக நிலையமும் யாழ். மாநகர சனசமூக நிலையங்களின் சமாசத்திற்குப் பொருட்களை வழங்கியுள்ளன. 170 சி

# நல்லூர் கந்தன் உற்சவம் ஆகஸ்ட் 1ம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம், ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகும்.

27 தினங்கள் நடைபெறும் மகோற்சவம் ஆகஸ்ட் மாதம் 27ந் திகதி மாலை 5 மணிக்கு நடைபெறும் வைரவர் உற்சவத்துடன் நிறைவு பெறும்.

திருவிழாக் காலங்களில் வரும் விசேட தினங்கள் வருமாறு: ஆகஸ்ட் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத் திருவிழாவும், 10ம் திகதி வியாழக்கிழமை மஞ்சத் திருவிழாவும், 18ம் திகதி வெள்ளிக்கிழமை கார்த்திகை உற்சவமும், 20 திகதி ஞாயிற்றுக்கிழமை கைலாய வாகனத் திருவிழாவும், 21ம் திகதி திங்கட்கிழமை வேல் விமானமும், 22ம் திகதி செவ்வாய்க்கிழமை தண்டாயுதபாணி உற்சவமும், 23ம் திகதி புதன்கிழமை சப்பறத் திருவிழாவும், 24ம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும், 25ம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும், 26ம் திகதி சனிக்கிழமை பூங்காவனமும், 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வைரவர் உற்சவமும் நடைபெறும். 162

# பெறுமதி வாய்ந்த பொருட்களை இராணுவம் சூறையாடியது

(யாழ்ப்பாணம்)

முன்னேறிப் பாய்ச்சல் இராணுவ நடவடிக்கையில் சங்கரத்தை, சித்தன்கேணி, சண்டிலிப்பாய், சுழிபுரம் போன்ற இடங்களில் தங்கியிருந்த இராணுவத்தினர் பல லட்சம் பெறுமதியான பொருட்களைச் சூறையாடிச் சென்றுள்ளனர்.

சண்டிலிப்பாய் வைரவர் ஆலயத்திற்கு அருகிலுள்ள ஒரு வீட்டில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் அவ் வீட்டில் இருந்தபல பெறுமதிமிக்க பொருட்களை சூறையாடிச் சென்றுள்ளனர்.

வடலியடைப்பில் இருந்து இடம் பெயர்ந்து வந்து அங்கு வைத்த அவ் வீட்டுக்காரரின் சகோதரியின் பொருட்களும் அவ்வீட்டுக்காரரது பொருட்களுமே சூறையாடப்பட்டுள்ளது.

கையில் இலகுவாக எடுத்துச் செல்லக்கூடிய சிறிய ரேடியோ, டெக், கமரா, வோக்மன், பெறுமதிமிக்க சாறிகள் போன்ற சிறிய, சிறிய பெறுமதிமிக்க பொருட்களே இராணுவத்தினரால் சூறையாடப்பட்டுள்ளது.

வீட்டின் மதிலை உடைத்து சென்றி போட்டு இராணுவத்தினர் இருந்துள்ளதாகவும் பொல்லுகள் கூரிய கத்திகள் எல்லாம வைத்திருந்ததாகவும் அவ் வீட்டுக்காரர் தெரிவித்தார். ர-கி

# முதலுதவிப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியில் நடாத்தப்பட்டு, போர்க்காலச்சூழ்நிலைகளால்தொடர்ந்து நடாத்தப்படாதிருந்த போர்க்கால முதலுதவிப் பயிற்சி, இன்று 22, 23ம் திகதிகளில் முற்பகல் 9-00 மணி முதல் பிற்பகல் 5-00 மணி வரை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் பங்குபற்றியோர் அங்கு வருகை தரும்படியும், கேட்கப்படுகிறது.

பயிற்சி முடிவடைந்து வெளியேறியவர்கள் தமது பிரதேசச் செயலாளர் அனுசரணையுடன் பலரை முதலுதவிப் பயிற்சியில் பயிற்றுவிக்கவுள்ளனர், ரி

## இலங்கை வானொலியின்

# விசேட செய்திச் சுருக்கம் நிறுத்தப்பட்டது

(கொழும்பு)

வலிமேற்கு இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அதன் உள்ளூர் சேவைகளில் ஆரம்பித்த விசேட செய்திச் சுருக்கம் இராணுவம் பின்வாங்கியதையடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

ஒரு மணித்தியாலத்துக்கு ஒரு தடவை மூன்று நிமிட நேரம் ஒலிபரப்பப்பட்டு வந்த வடபகுதி யுத்தநிலை பற்றிய விசேட செய்திச் சுருக்கத்துக்குப் பதிலாக தற்பொழுது முன்னரைப்போல் வெளிநாட்டுச் செய்திகள் ஒலிபரப்பாகின்றன.

வடக்கிலிருந்து பெறப்படும் யுத்த செய்திகளை உடனுக்குடன் ஒலிபரப்புவதற்காக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அதன் விசேட நிருபர்களை பலாலியில் தங்க வைத்திருந்து எப். எம். அ2 வரிசையினூடாக இவர்கள் செய்திகளை கொழும்புக்கு அனுப்புவதற்கும் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இ-சி

## இராணுவ நடவடிக்கையால்
# மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களை பதிவு செய்யுமாறு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

வலிகாமத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது பாதிக்கப்பட்ட மக்கள் தத்தம் கிராமசேவையாளர்களிடம் சென்று பதிவு செய்து கொள்ளுமாறு யாழ். அரசாங்க அதிபர் பொதுமக்களை கேட்டுள்ளார்.

இறப்புக்கள் சொத்தழிவுகள் மற்றும் பாதிப்புக்களை மக்கள் உரிய கிராமசேவையாளரிடம் சென்று பதிவு செய்து கொள்ளுமாறும் அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனைவிட கிராமசேவையாளர்கள் தத்தம் அலுவலகங்களில் இருந்துபொதுமக்களின் அழிவுகள் மற்றும் பாதிப்புக்களை திரட்டுமாறும் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் வலிமேற்கில் பெருமளவு அனர்த்தங்கள் ஏற்பட்டிருப்பதால் மக்கள் மத்தியில் பெரும் உயிர்ச்சேதம் பொருட்சேதம் என்பன இடம்பெற்றுள்ளது.

இதனால் மக்கள் பெரும் சொல்லண்ணா துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

இப்பகுதி மக்களின் அழிவு விபரங்களை குறுகியகாலத்தில் திரட்டி எடுப்பதற்கு யாழ். அரச அதிபர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார். 170-சி

# விசேட பரீட்சை நடைபெற்றால் பல்கலை. அனுமதியில் சட்டப் பிரச்னை?

(கொழும்பு)

க. பொ. த. உயர்தரப் பரீட்சை யாழ். மாவட்டத்துக்கு மட்டும் ரத்துச் செய்யப்பட்டு அது பிறிதொரு தினத்தில் விசேட பரீட்சையாக நடத்தப்படவுள்ளமை சட்ட ரீதியிலான பல சிக்கல்களை தோற்றுவிக்கலாமென தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு விசேட பரீட்சை யாழ். மாவட்டத்திற்கு மட்டும் நடாத்தப்படும் பட்சத்தில் அதில் சித்தியடையும் மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியில், கடந்த சில வருடங்களுக்கு முன்னர் விசேட பரீட்சை தொடர்பாக கொழும்பு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை பின்பற்ற வேண்டிய நிலை ஏற்படலாம்.

இதேவேளை, இவ்வாறான நிலைமை ஏற்படுவதை தடுக்க இனி ஒரு போதும் நாட்டின் எந்தப் பகுதியிலும் க. பொ. த. உயர்தர விசேட பரீட்சை நடாத்தப்படமாட்டாதென அப்போதைய கல்வி, உயர் கல்வி அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமித் கூறியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

கி- சி

# தமிழ்மாணவரின் கல்வியை பறிக்கவே தற்போதைய இராணுவ நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]

'க. பொ. த. உயர்தரப் பரீட்சை நடாத்த திட்டமிடப்பட்டிருந்த வேளையில் யாழ். குடாவில் பெருமெடுப்பில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட செயலானது தமிழ்மாணவர்களின் கல்வியை வேண்டுமென்றே பாதிக்கச் செய்யும் ஒரு திட்டமிட்ட செயலாகவே கருதவேண்டியுள்ளது,'

இவ்வாறு மகளிர் அபிவிருத்தி நிலைய இயக்குனர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் உலக நாடுகளிலுள்ள மகளிர் அமைப்புகளுக்கும் மனித உரிமை அமைப்புகளுக்கும் அனுப்பி வைத்த மகஜரில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் அவ்வறிக்கையில் தெரிவிப்பதாவது; தற்போது க. பொ. த. உயர்தர பரீட்சையை குழப்பும் வகையில் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட இராணுவ நடவடிக்கையானது தமிழ்மாணவர்களின்கல்வியை பாதிக்கும் பாரதூரமான அடிப்படை மனித உரிமைமீறலாகும்.

எனவே இராணுவ நடவடிக்கையை பரீட்சைக் காலத்தில் உடனடியாக நிறுத்தி மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றும் நிலையை ஏற்படுத்த வேண்டுமென்றும் கேட்டுள்ளார்.

ர சி

# தமிழ் - முஸ்லிம் பாடசாலைகளில் 7000 ஆசிரியர்களுக்கு வெற்றிடம்

(கொழும்பு)

நாடுமுழுவதிலுமுள்ள தமிழ் முஸ்லீம் பாடசாலைகளில 7000 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் இருப்பதாக கல்வி அமைச்சின் புள்ளிவிபரங்கள் தெரிவிப்பதாக கல்வி உயர்கல்வி அமைச்சர் ரிச்சட் பத்திரான தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் நடைபெற்றஆசிரியர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்று தெரிவான 1000பேருக்கு நேர்முகப்பரீட்சை நடைபெற்றுள்ளது என்றும் மிகுதி வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் ஐயாயிரம் தமிழ் ஆசிரியர்களை வடக்கு கிழக்குப் பாடசாலைகளுக்கு நியமிக்கவிருப்பதாகவும் அதற்கான விண்ணப்பங்கள் விரைவில் கோரப்படுமெனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் கடந்த ஜனவரியில் நடைபெற்ற ஆசிரியர் போட்டிப் பரீட்சை பெறுபேறுகள் இதுவரை வடபகுதி பரீட்சார்த்திகளுக்கு கிடைக்காததும் தெரிந்ததே.

ர-சி

# தேவாலயம் மீதான தாக்குதலை விசாரிக்க அரசு இழுத்தடிப்பு
## யாழ். ஆயரகம் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

நாவாலியில்சென் பீற்றேர்ஸ் ஆலயத்தின் மீது விமானப் படையின் 'புக்காரா' விமானம் மேற்கொண்ட குண்டுத் தாக்குதல் தொடர்பாக விசாரிக்க விசாரணைக் கமிஷன் ஒன்றை நியமிக்காது அரசு இழுத்தடித்து வருவதாக யாழ். கத்தோலிக்க மறை மாவட்ட ஆயரகம் குற்றம் சாட்டியுள்ளது.

இத்தாக்குதல் தொடர்பாக யாழ். அரசாங்க அதிபர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், யாழ் ஆயர் ஆகியோரால் அனுப்பப்பட்ட அறிக்கைகளை அரசு வரவேற்கவில்லையெனவும், அவற்றை கவனத்தில் கொள்ளவில்லையெனவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

நவாலி தேவாலயம் மீதான தாக்குதலையும், அதனால் அங்கு அடைக்கலம் புகுந்திருந்த நூற்றுக்கும் மேற்பட்டமக்கள் 'கொல்லப்பட்டதையும் முதலில் மறுத்த அரசு பின்னர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அறிக்கையைத் தொடர்ந்து தமது நிலையை மாற்றி' இதுகுறித்து விசாரிக்ககமிஷன் ஒன்று நிறுவப்படுமென அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. கி-சி

## திருட்டு

(கொழும்புத்துறை)

கொடிகாமம் சந்தையில் விடப்பட்ட புதிய 'ஏசிய' ரக சைக்கிள் ஒன்று அண்மையில் திருட்டுப் போயுள்ளதாகச் சாவகச்சேரி காவல் துறை நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

154-கி

## பொங்கல் விழா

(அரியாலை)

சுதுமலை வடக்கு ஈஞ்சடி ஞான வைரவர் ஆலய வருடாந்த பொங்கல் விழா இன்று சனிக்கிழமை அதிகாலை நடைபெறவுள்ளது. 56

# சண்டைக்கு வந்த படையா? சாப்பிட வந்த படையா?

(யாழ்ப்பாணம்)

வலிமேற்கு பகுதிக்குள் முன்னேறி பின்னர்புலிகளால் விரட்டியடிக்கப்பட்ட படையினர் சண்டைக்கு வந்தவர்களா? அல்லது சாப்பிடவந்தவர்களா? என அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

படையினர் தப்பிச்சென்ற பின் மூளாய், பொன்னாலைப் பகுதிக்கு தமது இருப்பிடங்களுக்கு சென்ற மக்கள் வீதிகள், ஒழுங்கைகள், வளவுகள், வீடுகள், கடைகள், கோயில்கள், குளக்கரைகள் எங்கும் அடுப்புமூட்டப்பட்டு சமைக்கப்பட்ட அடையாளங்களை கண்டுள்ளனர்.

எப்பகுதிக்குத் திரும்பினாலும் சமையல் உபகரணங்களும், அடுப்புகளும், சாப்பிட்ட உணவுப் பொருட்களுமே காணப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். இப்பகுதிகளில் இருந்த சகல வீடுகளிலும் இருந்து சமையல் உபகரணங்களையே படையினர் பயன்படுத்தியுள்ளனர்.

-சி

# தெகிவளை - கல்கிசை மாநகர முதல்வர் பதவி நீக்கம்

(கொழும்பு)

தெகிவளை-கல்கிசை மாநகர சபை முதல்வர் நேற்று முன் தினம் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

மேல் மாகாண முதல் அமைச்சரால் மாநகரசபை முதல்வர் டி. எஸ் ஜயசிங்க பதவி நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இவரது இடத்திற்கு உப முதல்வராக இருந்த செனிவிரட்ண நியமிக்கப்படுள்ளார்.

கே-கி-சி

# அளவெட்டியை நோக்கி தினமும் ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் நேற்று காலையும் அளவெட்டி பகுதியை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

அளவெட்டி பகுதியில்உள்ள மக்கள் குடியிருப்புக்களை நோக்கி ஷெல் தாக்குதலை மேற்கொள்வதால் அளவெட்டிக்கு சென்ற மக்கள் மீண்டும் இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

170- கி- சி

## திருமலையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மைக்கேல் யோகநாதன் மதன் மூதூர்என் போராளி வீரச்சாவு அடைந்தார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். க-ரி

## அதிகரித்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாஸ் கூறியது.

யுத்தச் செலவை ஈடுசெய்யும் நோக்குடனே தேசிய பாதுகாப்பு நிதிபோன்று பல வகைகளிலும் அரசு நிதி திரட்டி வருகிறது.

அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளுக்கென பல வெளிநாட்டு உதவி வழங்கும் நிறுவனங்கள் வழங்கும் நன்கொடைகளும் யுத்தத்துக்கு பயன்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. கி-ரி

## வடக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யேல் எதிரிகளுக்கும் அவை எட்டிவிடுமெனவும் அவர் அங்கு கூறினார்.

'முன்னேறிப் பாய்தல்' நடவடிக்கை தொடர்பாக அமைச்சர் ரத்வத்த நாடாளுமன்றத்தில் மேலும் உரையாற்றும் போது, 'முன்னேறிப் பாய்த'லின் போது தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த பகுதிகளை இப்போது ஸ்திரப்படுத்தியுள்ளார்கள். இவர்கள் எதிரியைத் தோற்கடிக்கவே இந்த இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டிருந்தார்கள். மீண்டும் பலாலி முகாமுக்குத் திரும்புவதற்காக அல்ல. பிடித்த பகுதிகளில் காப்பரண்களையும், முன்னணிப் பாதுகாப்பு நிலைகளையும் அமைக்கும் நோக்கம் இராணுவத்தினருக்கு இல்லை. அவர்கள் தாம் கைப்பற்றிய இடங்களை ஸ்திரப்படுத்திக் கொண்டு முன்னேறிச்செல்வார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இவர்கள் இந்த நிலைகளிலிருந்து தாக்குதல்களை நிகழ்த்துவார்கள் என்றும் அவர் மேலும் அங்கு மேலும் விளக்கமளித்தார். கி-ரி)

## இருநாள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கிகள் -03
- ஏ. கே. ரக துப்பாக்கிகள் -11
- டோக்காரோ பிஸ்டல் -01
- நடுத்தர ரவைகள் -14.423
- 40 மி. மீ. ஷெல்கள் -15
- 60 மி மீ. ஷெல்கள் -18
- கைக்குண்டுகள் -25
- கிளேமோர்கள் -02
- ரவைக்கூடுகள் -36

ஏ. கே. எல். எம். ஜி றம் ரவைக்கூடுகள் 23
- ஏ. கே. ரவைக்கூடு -41
- துப்பாக்கி ஷெல்கள் -02
- தொலைக்காட்சி -01
- 60 மி. மீ. ஸ்கோப் -01
- தலைக்கவசங்கள் -10
- போக்கேஸ் லைற் -02
- லைற் சார்ஜ்ஜர்கள் -06
- ஏ கே. எல். எம். ஜி.


தொடர் ரவைகள் -1527

என்பன விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

மட்டக்களப்பில் நேற்றுமுன் தினம் நடத்திய தாக்குதலின் போது விடுதலைப்புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களின் விபரம் வருமாறு:
- ஏ. கே. எல். எம். ஜி. துப்பாக்கி -01
- ஏ. கே ரக துப்பாக்கிகள் -06
- ஏ. கே. எல். எம் ஜி றம் ரவைக் கூடுகள் -03
- ஏ. கே. எல் எம் ஜி. தொடர் ரவைகள் -400
- ஏ. கே. ரவைக்கூடுகள் -13
- நடுத்தர ரவைகள் - 2425
- சி 3 வெடிமருந்து - 500 கிராம்
- பென்ரலைட் வெடிமருந்து - 3 கட்டி
- கைக்குண்டுகள் -03
- கோட்டெக்ஸ் வயர் - 08 யார்
- தொலைத் தொடர்பு சாதனம் -01

என்பன கைப்பற்றப்பட்டன,

இந்தத் தாக்குதலில் வீரவேங்கை விநோதன் (கந்தசாமி லிங்கேஸ்வரன் அம்பாறை) என்ற போராளி வீரச்சாவு அடைந்தார் இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். -ரி



புலிப்பாய்ச்சல் நடவடிக்கையின் போது மாகியப்பிட்டியில் விடுதலைப் புலிகளால் தாக்கி எரித்து சேதப்படுத்தப்பட்ட செயின் புல்டோசரை முதலாவது படத்திலும் விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட 'புக்காரா' விமானத்தின் சிதைவுகளை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# இலங்கைத் தமிழ் அகதிகள் வருகை இந்தியாவில் எதிர்பார்க்கப்பட்டது!

(சென்னை)

வடக்கில் "முன்னேறிப் பாய்தல்" இராணுவ நடவடிக்கை நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை தமிழகத்திலுள்ள அதிகாரிகள் இலங்கை அகதிகளின் வருகையை எதிர்பார்த்து தயாராக காத்திருந்ததாக "வெரித்தாஸ்" கூறியது.

யாழ் மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளினால் வதிவிடங்களை விட்டு வெளியேறிய மக்கள் பாதுகாப்புத் தேடி தமிழகத்துக்கு முன்னரைப்போல் படகுகளில் வந்திறங்குவார்கள் என தமிழக அதிகாரிகள் எதிர்பார்த்திருந்தனராம்.

இவர்களுக்காக முகாம்களை தயார் படுத்துவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. -கி-ரி

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வர்த்தகா சங்கம், வர்த்தகர் ஊழியர் சங்கம், சிகை அலங்கரிப்பாளர் சங்கம், பேக்கரி உரிமையாளர் சங்கம் ஆகியோர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று 22ம் திகதி பி.ப 2 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. ரி

## 4 சந்தேக நபர்கள் தேடப்படுகிறுர்களாம்

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் சென்ற மாதம் 5-ம் திகதி இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக நான்கு பேர் தேடப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டது.

சோமசுந்தரம் அரவிந்தன், ஜெகனுத் பாலேந்திரன், தர்மலிங்கம் தர்மகுலேந்திரன், ஜெயந்தி அருணுசலம் ஆகியோரே தேடப்படுபவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.-ரி

# ஈழத்தமிழர் கொல்லப்படுவதை தமிழகம் பார்த்துக்கொண்டிருக்காது!

### எம். ஜி. ஆர். அ. தி. மு. க. செயலர் எச்சரிக்கை

(சென்னை)

இலங்கையில் தொடர்ந்தும் தமிழர் படுகொலை செய்யப்படுவதை தமிழக மக்கள் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்களெனவும் அவர்கள் கொதித்தெழுவர் எனவும் அ. தி. மு. கழக பொதுச் செயலர் எஸ். திருநாவுக்கரசு இலங்கை அரசை எச்சரித்துள்ளார்

வடக்கில் இராணுவத்தால் தமிழர்கள் கொல்லப்படுவதைக் கண்டித்து நேற்று சென்னையில் இலங்கைத் தூதுவராலயத்தின் முன்னுல் எம். ஜி ஆர். அ. தி. மு. க ஆர்ப்பாட்ட மொன்றை நடத்தியது. அப்போது அங்கு திரண்டிருந்தவர்களின் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை அரசு ஆலயங்களில் அடைக்கலம் புகுமாறு அறிவித்துவிட்டு பின்னர் அவற்றின்மீது ஆகாய, தரைத் தாக்குதல்களை மேற்கொண்டு தமிழர்களைக் கொன்று குவிக்கிறது. தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா இலங்கையில் தமிழர்கள் கொல்லப்படுவதனை அறிந்தும் பாராமுகமாக இருந்து வருகின்றுர் எனவும் திருநாவுக்கரசு அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

பின்னர் இதுதொடர்பான மகஜர் ஒன்றை சென்னையிலுள்ள இலங்கை பிரதி தூதுவரிட கையளித்தார். கி ரி

## தேசிய முன்னணியிலிருந்து தி.மு.க. வெளியேறியது

(புதுடில்லி)

தேசிய முன்னணியிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகம் விலகியுள்ளது. தி. மு. க. தலைவர் இதனை நேற்று அறிவித்தார்.

தேசிய முன்னணியில் இணையுமாறு அனைத்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டதை ஆட்சேபித்தே தி. மு. க இம்முடிவை எடுத்திருக்கின்றது

தேசிய முன்னணி கூட்டு அமைப்பை ஏற்படுத்திய கட்சிகளில் தி. மு. க. வும் ஒன்றென்பது குறிப்பிடத்தக்கது. கி ரி

## ஹங்கேரியில் இலங்கையர் மரணம் குறித்து ஐவர் மீது விசாரணை!

(முடாபெஸ்)

மேற்கு ஹங்கேரியில் கடந்த வார இறுதியில் 18 இலங்கையர்களின் சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்து இம்மரணங்கள் தொடர்பாக பல்கேரிய நாட்டு பொலிசார் 5பேரை விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

பல்கேரிய அதிகாரி பெட்ரோவ் செய்தியாளரிடம் தெரிவிக்கையில் இந்த ஐவர் பற்றிய விபரங்களை வெளியிடவில்லை. ட்ரக் வண்டியின் சாரதி இந்த ஐவரில் ஒருவர் ஆவார்.

இச் சந்தேக நபர்களை ஹங்கேரியிடம் ஒப்படைப்பது குறித்து ஹங்கேரிய, பல்கேரிய நீதித்துறைகள் பரிசீலிக்கும். குற்றவாளிகளாகக் காணப்படுமிடத்து 5 முதல் 15 வருட சிறைவாசம் தண்டனையாக வழங்கப்படலாம். பல்கேரியப் பொலிசார் ட்ரக் வண்டியை வாடகைக்கு அமர்த்திய வர்த்தகப் புள்ளி ஒருவரையும் கைது செய்துள்ளனர் தீ-ரி)

## வீடு பார்க்கச் சென்றவர்கள் ராணுவத்தால் கைது

(மானிப்பாய்)

அளவெட்டி, ஏழாலை பகுதியிலுள்ள தங்கள் வீடுகளைப் பார்ப்பதற்கு சென்ற இளைஞர்களை இராணுவம் பிடித்துச் சென்றுள்ளது.

கடந்த 16ம் திகதி இடம் பெற்ற இச்சம்பவத்தில் அளவெட்டி கும்பளாவளையைசேர்ந்த தில்லையம்பலம் யசோதரன் (வயது 26) ஏழாலையைச் சேர்ந்த ஜீவா (22 வயது) இராசா [24 வயது] ஆகியோரே இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது, 71-ரி

வெகுவிரைவில் எதிர்பாருங்கள்!

மட்டு–அம்பாறை சிறப்புப் படையணியும், நிதர்சனமும் இணைந்து வழங்கும்

சி. சேரனின்

"உறங்காத கண்மணிகள்'

முழுநீள திரைப்படம்

திரைப்பட வெளியீட்டுப்பிரிவு,
நிதர்சனம்,
தமிழீழம்.

(எ-5119)

## கொழும்பில் தேங்கியுள்ள யாழ் தபால்களை உடனடியாக அனுப்பி வைக்ககோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்துக்குரிய தபால்களை உடனடியாகக் கப்பலில் அனுப்பி வைக்குமாறு யாழ். அரசாங்க அதிபர் கே. பொன்னம்பலம் நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக கொழும்புக்கு அனுப்பி வைத்துள்ள அவசர செய்தியில் கேட்டுள்ளார்.

இதேவேளை கொழும்பில் கடந்த பல மாதங்களாக தேங்கியிருக்கும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தபால் பொதிகளை உடன் அனுப்பி வைக்குமாறு வடபிரதேச பிரதி அஞ்சல் மாஅதிபர் திரு. எஸ். சடாட்சரநாதன் கொழும்பு தபால் திணைக்களத்தை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் கேட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது -170 175-ரி

## மன்னாரில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தலை தொடுத்தனர்.

இத்தாக்குதலின் போது பொலிசார் வந்த 'லாண்ட் ரேவர்' வாகனம் விடுதலைப் புலிகளால் முற்றாகச் சேதமாக்கப்பட்டது:

இராணுவத்தின் பூரண ஆக்கிரமிப்பில் கடும் பாதுகாப்பில் உள்ள மன்னார் தீவினுள் வைத்து வெற்றிகரமாக எதுவித இழப்புகளும் இன்றி நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் ஏ. கே. ரக துப்பாக்கிகள்-03, நடுத்தர ரவைகள்-140, ஏ. கே ரவைக் கூடுகள்-06 போன்றவை விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. -ரி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட்] க்காக ... யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, ... இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஜூலை மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683618.